# DEPOSITION OF WITNESS

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC. No.68/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.7 |
| பெயர் | ஹேமலதா | கிராமம் | |
| தந்தை பெயர் | ரங்கராஜ் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 10.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் மது விலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.02.2022 தேதியில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சம்மட்டிவிடுதி காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன். சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சரவணன் என்பவர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற தங்கராசு என்பவரிடம் புகாா வாக்குமூலம் பெற்று சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண். 29/2022 இதச பிரிவுகள் 294பி, 323, 324, 307 ன்படி வழக்கு பதிவு செய்து வைத்திருந்ததை என்னுடைய மேல் விசாரணைக்காக வைத்தார். நான் இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாஸ்கர், பாலாஜி ஆகியோர் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வைமகஜர் அ.சா.ஆ.9. மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10. சம்பவ இடத்திலேயே அதே சாட்சிகள் முன்னிலையில் மரத்தாலான 63 செ.மீ நீளமுள்ள கைப்பிடியுடன் கூடிய இரும்பு மண்வெட்டி ஒன்றையும், கம்பு ஒன்றையும்

கைப்பற்றினேன். நான் கைப்பற்றிய மண்வெட்டிக்காக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளேன். அது அ.சா.ஆ.11. அந்த மண்வெட்டி என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அது சா.பொ.1. அதன்பிறகு வழக்கு கோப்பை ஆலங்குடி வட்ட காவல் ஆய்வாளர் திருமதி.அழகம்மை அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை**

நான் தயார் செய்த பார்வைமகஜர் ஆவணத்தில் அதை தயார் செய்த மாதம் பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கைப்பற்றிய ஆயுதமான கம்புக்கு தனியாக கைப்பற்றுதல் மகஜர் எதுவும் தயார் செய்யவில்லை. இந்த வழக்கின் சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை. பார்வைமகஜர் சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்று சொன்னாலும், அங்கு வைத்து பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. பார்வைமகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் ஆகிய ஆவணங்களை ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் தயார் செய்தேன் என்று சொன்னால் சரிதான். பார்வை மகஜர் ஆவணத்தை 25ம் தேதி காலை 7.00 மணிக்கு தயார் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் 24.02.2022 தேதியில் 14.00 மணிக்கு மண்வெட்டியை கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி கேட்டால் பாா்வை மகஜர் ஆவணத்தை 24.02.2022 தேதியில் 13.00 மணிக்கு தயார் செய்தேன். அது தவறுதலாக 25ம் தேதி 2022ம் வருடம் என்று குறிப்பிடப்பட்டுவிட்டது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பார்வைமகஜர் ஆவணம் உண்மையான விபரம் குறித்த ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் என்னால் தயார் செய்யப்பட்ட உண்மையான பார்வைமகஜர் ஆவணம் மறைக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ஹேமலதா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.